**<u>அரக்கோணம் நகராட்சி</u>**
**<u>அவசர மன்ற கூட்ட அறிவிப்பு</u>**

**கூட்ட எண்.82** **நாள்.20.12.2021**

பொருள் அவசர மன்ற கூட்டம் – அரக்கோணம் நகராட்சி –
நாள்.20.12.2021 திங்கள் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு
சாதாரண கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக,
------

அரக்கோணம் நகராட்சி 15.12.2021 திங்கள் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள அவசர மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள்கள் விவரம்.

**ஆணையர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**

**பொருள் எண்.01**

15 வது நிதிக்குழு மான்யம் – 2021–22 –ஆம் ஆண்டிற்கான அரக்கோணம் நகராட்சியில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் நகர்புற சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய மையம் கட்டுதல் பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.32454/2021/அம்ருட்–2 நாள்:17.12.2021ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1 | நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.04 தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பகுதியில் நகர்புற சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய மையம் (Urban Health and Wellness Center) கட்டுதல். | 25.00 |
| | **மொத்தம்** | 25.00 |

**அலுவலககுறிப்பு :– மன்றம் பதிவு செய்யலாம்**

**(ந.க.எண். 995/2021/இ1)**

**பொருள் எண்.02**

நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வண்டி எண்.TN73W5969 என்ற வாகனத்திற்கு அவ்வப்போது ஏற்படும் பழுது வேலைகளை சரி செய்யவும் மற்றும் வருடாந்திர காப்பீட்டு பிரிமியம் செலுத்தவும் தோராய செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கும் தொகைக்கும் நகரமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: 1.மன்றம் அனுமதிக்கலாம்.**

**2.மேற்படி வாகனத்தை ஜெனரல் சர்வீஸ் செய்ய மகேந்திரா நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான ஜெயின் கார்ஸ் (ம) ஆட்டோ சேல்ஸ் நிறுவனத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.1410/14/இ1)**

**பொருள் எண்.03**

இந்நகராட்சியில் இயக்குதல் மற்றும் பராமத்தல் உள்கட்டமைப்பு மற்றும் இடைவெளி நிரப்புதல் வட்டி நிதி (Operational & Maintenance Gap Filling Interest Fund 2021–22ஆம் ஆண்டின் கீழ் 17.12.2021ம் தேதி கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1/ | 2/ | 3/ | 4/ | 5/ | 6/ | 7/ |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1 | வார்டு எண்.10 மோசூர் ரோடு பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடம் பராமத்தல் பணிகள் மேற்கோள்ளுதல் | 5.00 | திரு.கே.முனுசாமி<br>திரு.ஆர்.சண்முகம் | 1.98 %<br>2.69 % | --- | --- |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | வார்டு எண்.28 புதுப்பேட்டை பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடம் பராமத்தல் பணிகள் மேற்கோள்ளுதல் | 5.00 | திரு.கே.முனுசாமி<br>திரு.ஆர்.சண்முகம் | 1.98 %<br>2.69 % | --- | --- |
| 3 | வார்டு எண்.12 மார்கெட் பகுதியில் உள்ள பொது கழிப்பிடம் பராமத்தல் பணிகள் மேற்கோள்ளுதல் | 1.60 | திரு.கே.முனுசாமி<br>திரு.ஆர்.சண்முகம் | 4.67 %<br>5.79 % | --- | --- |
| 4 | வார்டு எண்.20 புதிய பேருந்து நிலைய பகுதியில் உள்ள பொது கழிப்பிடம் பராமத்தல் பணிகள் மேற்கோள்ளுதல் | 1.60 | திரு.கே.முனுசாமி<br>திரு.ஆர்.சண்முகம் | 4.67%<br>5.79% | --- | --- |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.01 முதல் 04 வரை வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளதால் அதில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.கே.முனுசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகிதத்தை குறைத்து வழங்குமாறும், மேலும் நகராட்சியில் போதிய நிதியாதாரம் இல்லாததால் ஒப்பந்ததாரரை மதிப்பீடு விகிதத்திலே பணிகளை மேற்கொள்ள ஒப்புதல் பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். 762/இ1/2021**

**பொருள் எண்.04**

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண். சி-132/2021 ந.க.எண்.தே.பொ.அ/6669/2021-4 நாள்.23.10.2021-ன்படி இந்நகராட்சியில் சாதாரண தேர்தல் - 2021 - க்கான தேர்தல் பணிகள் மேற்க்கொள்ளப்பட்டு வருவதால் மேற்படி தேதல் அறிவிப்பு வெளியீடு செய்து தேர்தல் நடத்தும் பணி மேற்க்கொள்ளவும். தேர்தல் பணியில் ஈடுபடும் தேர்தல் நடத்தும் அலுவலர், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர், மண்டல அலுவலர் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு மதிப்பூதியம் வழங்கவும் தேர்தல் பணியின் அவசியத்தை கருதி தேர்தல் தொடர்பான அனைத்து தேர்தல் பணி செலவினம் தோராயமாக ரூ.75,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: தேர்தல் பணியின் அவசியத்தைக் கருதி மேற்படி செலவினம் மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**

**பொருள் எண்.05**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட தக்கோலம் தலைமை நீரேற்று நிலையத்தில் 120Hp Vertical Turbine Motor 2 எண்ணிக்கையில் 1 எண்ணிக்கை பழுது ஏற்பட்டுள்ளதால் மற்றொரு 120Hp Vertical Turbine Motor தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது. மாற்று மோட்டார் தேவைப்படுவதால் மின் மோட்டரின் பழுது சரிசெய்து இயக்கி தருதல் பணிக்கு மதிப்பீடு ரூ.2.30 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :- 1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. குடிநீர் பணியின் அவசியத்தை கருதில் கொண்டு ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்**

**ந.க.எண். 913/இ1/2021**

**பொருள் எண்.06**

அரக்கோணம் நகராட்சி அலுவல வளாகத்தில் உள்ள நகர மன்ற தலைவர் அறை மற்றும் ஆணையாளர் அறை பழுது பார்த்தல் பணிகளை மேற்கொள்ள மதிப்பீடு பின்வருமாறு தயாரிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள நகர மன்ற கூடம், நகர மன்ற தலைவர் அறை மற்றும் ஆணையாளர் அறை மராமத்து பணிகள் செய்தல். | 9.80 |
| 2 | நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள நகர மன்ற கூடம், நகர மன்ற தலைவர் அறையில் உள்ள மேஜை நாற்காலி மராமத்து பணிகள் செய்தல். | 9.60 |

**அலுவலக குறிப்பு :– 1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்படி பணிகளுக்கு தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்**

**ந.க.எண். 507/இ1/2021**

**பொருள் எண்.07**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை குப்பை சேகரிப்பு செய்து அதனை அப்புறப்படுத்துதல், தினசரி வீடுகள் மற்றும் தெருக்களிலுள்ள மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை தரம் பிரித்து சேகரித்து On site Composting மற்றும் Micro Compost Centre (MCC) தொட்டிகளில் சேர்க்கும் பணிக்கும், 36 வார்டுகளிலுள்ள தெருக்களின் பின்புறத்தில் அமைந்துள்ள சந்துகளில் உள்ள குப்பைகளை மற்றும் கால்வாய்களை சுத்தம் செய்தல், தூர்வாருதல், தெருக்களை பெருக்குதல் போன்ற பணியினை மேற்கொள்ள இந்நகராட்சியில் உள்ள 116 துப்புரவு பணியாளர்களை கொண்டு முழுமையாக அப்புறப்படுத்த முடியாத காரணத்தினால் இந்நகராட்சிக்கு கூடுதலாக மாவட்ட ஆட்சியரின் தினக்கூலி அடிப்படையில் 195 பணியாளர்களை நியமித்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் ,சென்னை, அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.30813/J3/2018 நாள்:11.12.2018.ல் உத்தரவு வழங்கப்பட்டு ஆணையாளர், அரக்கோணம் நகராட்சி அவர்களின் பணி உத்திரவு ந.க.எண் 2835/2018/எச்1 நாள்: 30.07.2020–ல் ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ், அரக்கோணம் நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு 01.08.2020ம் தேதி முதல் இது நாள் வரையிலும் 195 தூய்மை பணியாளர்களை கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணி தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது .இந்நிலையில் 31.07.2020 தேதியுடன் ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ், அரக்கோணம் நிறுவனத்திற்கு பணி உத்திரவு முடிவடைவதாலும் தற்போது கொரானா தொற்று உலகம் முழுவதும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாலும் நகராட்சி நிர்வாக ஆணையர் ,சென்னை, அவர்களின் நிர்வாக அனுமதி டிசம்பர் மாதத்துடன் முடிவடைவதாலும் இப்பொருள் குறித்து ஒப்பந்தப்புள்ளி நீட்டிப்பு செய்திடவும் அல்லது புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள இயலாத நிலையில் தற்போது ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் வரை ஏற்கனவே பணி செய்து வரும் ஸ்ரீ வாரி எண்டர்பிரைசஸ், அரக்கோணம் நிறுவனத்தின் மூலம் ஏற்கனவே பணியாளர்களை வழங்கி வரும் அதே மதிப்பீட்டில் மேற்படி நிறுவனத்தினரின் 23.06.2021 ஆம் தேதிய சம்மத கடிதத்தின் பேரில் தொடர்ந்து 2 மாதங்கள் (01.08.2021 தேதி முதல் 30.09.2021 வரை ) பணி உத்திரவு வழங்கி மேற்படி பணியானது செயல்படுத்தப்பட்டு வருகிறது எனவே மேலும் 01.10.2021 தேதி முதல் 31.12.2021 தேதி வரை ஏற்கனவே பணியாளர்களை வழங்கி வரும் அதே மதிப்பீட்டில் மேற்படி நிறுவனத்தின் மூலம் மேலும் 3 மாதங்கள் பயன்படுத்தி கொள்ளவும் அற்கான தோராய செலவினம் ரூ.81.00 லட்சத்திற்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:– மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.**

**(ந.க.எண். 826/2015/எச்1)**

ஆணையர் மற்றும் தனி அலுவலர்
அரக்கோணம் நகராட்சி